Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி


நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 25 (08-03-1992) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 19

## பாடசா. அபிவிருத்திசபை; பதவிக்காலம் 3 வருடம்

பாடசாலை அபிவிருத்திச்சபைகளை மூன்று வருட பதவிக் காலமாக இயங்க வைக்க பரீட்சார்த்த நட வடிக்கை எடுக்கட்பட்டுள்ளதென நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பாடசாலை அபிவிருத்திச்சபை களை அவசர காலச் சட்டத்தின் கீழ் செயல்படுத் துவது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது கல்விச் சேவைகள் அமைச்சர் சுனித் திரா ரணசிங்க தெரிவித்தார். (6ஆம்பக்கம் பார்க்க)

# எமதுவிடுதலைஇயக்கத்துடன் பெண்கள் அணிசேரவேண்டும்

## தலைவர் பிரபாகரன் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

"ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும். வீரமும், தியாகமும், துணிவும், தன்னம்பிக்கையும் கொண்ட புரட்சிப் பெண்ணாக மாறமுடியும். பெண் விடுதலைக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும்போதுதான் எமது போராட்டமும் முழுமைபெறும்".

தலைவர் பிரபாகரன் அனைத்துலக பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் மாநாட்டிற்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தலைவர் பிரபாகரன் அனுப்பிவைத்த செய்தியின் முழு விபரம் வருமாறு:

இன்று அனைத்துலக பெண்கள் நாள். உலகப் பெண்ணினத்தின் உரிமைக்குரல் உலகெங்கும் முழங்கும் ஓர் எழுச்சி நாள். மனித இனத்தின் சரிபாதி சனத்தொகையினர் சமநீதிகேட்டு நிற்கும் ஒரு புரட்சி நாள். இந்தப் பெண் எழுச்சி தினம் இன்று தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பெண் ஒடுக்குமுறை என்பது யுகம் யுகமாக எல்லா நாடுகளிலும், எல்லா சமூகங்களிலும், எல்லாப் பண்பாடுகளிலும் நிலவிவந்த ஒரு சமூக அநீதி. இந்த சமூக அநீதி முறை இன்னும் இந்தப் பூமியிலிருந்து அகன்று விடவில்லை.

## சமதர்ம உலகிலும் பெண்ணின் சமநீதி கிட்டவில்லை

நீண்டகாலமாக, வளர்ச்சி கண்ட நாடுகளில் தொடர்ச்சியாக நடந்துவந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக பெண்ணினம் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக்கொள்ள முடிந்தது. அடிப்படையான மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் பெண்கள் வென்றெடுக்க முடிந்தது. கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனினும் இந்த நாடுகளில் பெண்ணின் பிரச்சினைகள் தீர்ந்த பாடில்லை. இங்கு பழைய பிரச்சினைகள் புதிய வடிவங்களில் தோற்றம் கண்டு வருகின்றன.

அன்றொரு காலம், மேற்குலகில் முதலாளித்துவம் எழுச்சி கொண்டு வளர்ச்சி கண்ட சகாப்தத்தில் பெண்ணினம் மிகவும் ஈவிரக்கமற்ற சுரண்டல் முறைக்கு ஆளாகியது. அப்பொழுது பெண் ஒடுக்குமுறையின் மூலகாரணி முதலாளித்துவம் எனக் கூறப்பட்டது. தனியார் சொத்துடைமை நீக்கப்பட்டால் சமத்துவமற்ற பொருளாதார அமைப்பு ஒழிக்கப்பட்டால், பொருளுற்பத்தியில் பெண்கள் ஈடுபட்டால் பெண்ணினத்திற்கு விடிவுகாலம் பிறக்கும் என வாதங்களும் முன் வைக்கப்பட்டன. இதனால் விடுதலை வேண்டி நின்ற பெண்ணினம் சமூகப் புரட்சிப் போராட்டங்களில் அணி சேர்ந்துகொண்டது. பெண்களின் பங்களிப்புடன் பல நாடுகளில் சமூகப் புரட்சிகள் நிகழ்ந்தன சமுதாய மாற்ற மூலம் பொருளாதார சமத்துவத்தைக் கட்டி எழுப்பிய நாடுகளில் பெண்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தது. சமூக அந்தஸ்து மேம்பட்டது. ஆயினும் இந்நாடுகளில் பெண் ஒடுக்குமுறை முற்றாக நீங்கிய பாடில்லை சமதர்ம சமூக உலகத்திலும் பெண்ணுக்குச் சமநீதி கிடைத்ததாகக் கூறிவிட முடியாது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்துவைக்கப்பட்ட 16 பேர் நேற்று விடுதலை

இன்று எமக்கு சிறிலங்கா அரசு மட்டுமல்ல இந்திய அரசுமே எதிரியாக மாறியுள்ளது. தமிழ்க் குழுக்கள் கூட அதே நிலையில் உள்ளன. எனவே எம்மை எதிரிகள் சூழ்ந்துள்ளார்கள். ஆகவே நாம் விழிப்பாக இருக்கவேண்டும். சமூக விரோதிகளை இனங்கண்டு அவர்களை எம்மிடம் நீங்கள் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ் மாவட்டச் செயலகத்தில் வைத்து பதினாறு பேர் விடுதலை செய்யப்பட்டபோது உதவி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தங்கன் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இவர்கள் பதினாறு பேரும் பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப் பட்டவர்களாவர். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய எமது போராட்ட காலத்தில் பலபேர் பல காரணங்களுக்காக கைது செய்யப்படுகின்றார்கள். விசாரணைகளின் பின் அதற்கேற்ப தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இந்த வகையில் இனிமேல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காட்டில் தேடுதல் மேலும் ஒரு சடலம் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டில் கடந்த வியாழனன்று சிறிலங்காஇராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது கொல்லப்பட்ட இராணுவத்தின் மேலும் ஒரு சடலம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டுள்ளது. இதனால் கைப்பற்றப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் பல வெடிப் பொருட்களும் இராணுவப் பொருட்களும் கைப்பற்றப் பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

- ★ ரி - 56 மகசின் - 05
- ★ ரி - 81 மகசின் - 05
- ★ ஜே. ஆர். கிரணைட் - 03
- ★ நடுத்தர ரவைகள் - 175
- ★ ஏ. கே. கோல்சர் - 01
- ★ ஆர். பி ஜி. புரொப்லர் - 01
- ★ சப்பாத்து - 01 சோடி
- ★ தலைக்கவசம் - 07

# தமிழீழப் பெண்கள் எழுச்சி மாநாடு கிளிநொச்சியில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு தமிழீழ தேசிய மட்டத்திலான பெண்கள் மாநாடு நேற்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகியது.

இம்மாநாட்டிற்கு செல்வி ஜெயா தலைமை வகித்தார். விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவைச் சேர்ந்த செல்வி காந்தி தீபமேற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மகளிர் படைப் பிரிவின் துணைத்தளபதி செல்வி ஜெனு ஏற்றி வைத்தார்.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் முதலில் மாவீரர்களுக்கான நினைவஞ்சலியும், 1990 ஆம் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டு பின்னர் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தோழிகளுக்கான விசேட நினைவஞ்சலியும் இடம் பெற்றன.

அதனைத் தொடர்ந்து மாநாட்டின் நோக்கங்கள், குறிக்கோள்கள், வேலைத்திட்டங்கள் குறித்து செல்வி ஜெயா தனது தலைமை உரையில் விளக்கிக் கூறினார்.

தொடர்ந்து இடம் பெற்ற கலந்துரையாடலில் தமிழீழப் பெண்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்வு, அடக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள் என்பன பற்றியும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கம்பியூட்டர் கல்வி


BASIC dBASE III+ LOTUS 1-2-3
WORD STAR 2000+

### புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன:

யாழ். வடமராட்சியில்:
09-03-1992 (திங்கள், புதன், வெள்ளி)
14-03-1992 (சனி, ஞாயிறு)

செய்முறை பயிற்சிகள் யாவும் ஜெனரேட்டர் உதவி கொண்டு வழங்கப்படும்.

**யுனிக்கோ**
**கம்பியூட்டர் சென்ரர்**
இல 37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



**சதா**
**பொன்ஸ்**
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(சி-4022)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இம்மானுவேல் அமலதாஸ் என்பவரின் அடையாள அட்டை (இல 673385442 v) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வண்ணார்பண்ணை லோட்டஸ் வீதியிலுள்ள பாரதி சன சமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (2276)

### கல்வி

புலமைப்பரிசில் வகுப்பிலிருந்து G. C. E. (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்தில் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (2273)

### நன்றி கூறுதல்

கைதவறவிட்ட பையை மீள ஒப்படைத்த வே.யோகநாதன் அவர்களுக்கும் ஈழநாதம் ஸ்தாபனத்தாருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இ. சந்திரசேகரம். (2272)

### ஜோதிட விஞ்ஞானம்

ஜெனன ஜாதகங்கள் விஞ்ஞான ரீதியாக கணிப்பதற்கும், ரேகை சாஸ்திரம், எண் ஜோதிடம், திருமணப்பொருத்தங்கள் பார்ப்பதற்கும் காலையில் நேரிலே சந்திக்கவும். Prof. சத்தியதாஸன், ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணிச் சந்தி. (2271)

## தமிழ் முஸ்லிம் மாணவருக்கு அநீதி

(தலவாக்கொல)

கொட்டகல சிறீபாத கல்விக் கல்லூரியில் தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு வழங்கப்படும் அனுமதியில் அநீதி நிகழ்வதாக அங்குள்ள பொது மக்கள் கல்விச் சேவைகள் அமைச்சர் சுனித்திரா ரணசிங்காவுக்குப் புகார் தெரிவித்துள்ளனர்:

இதையடுத்து விசாரணை நடாத்தி அதற்குரிய நிவாரணம் வழங்கப்படும் என பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.


உனது 5ஆம் ஆண்டு நிறைவில் எமது
**விழிகள் சிந்தும்**
**அஞ்சலி**



**வீரவேங்கை**
**கண்ணன்**
**(கந்தையா பாபு)**

**வீர ஜனனம் :**
**1967 - 06 - 06**

**வீரச்சாவு :**
**1987-03 - 08**



உமது 1 ஆம் ஆண்டு நிறைவில்
**உமக்கு எமது கண்ணீர் மாலை**



**வீரவேங்கை**
**கண்ணன்**
**(கந்தையா பாலகிருஷ்ணன்)**

**வீரஜனனம் :** 1973 - 07 - 08
**வீரச்சாவு :** 1991 - 02 - 05

### லெப். லவக்குமார் (உத்தமன்)

**வீரச்சாவு : 1987 - 03 - 08**

தாயக மண்ணின் வேதனை கண்டாய்
தமிழர் வாழ்வினில் இன்னல்கள் கண்டாய்
மாளுமா எம் இனம் இன்னமும் என்று
மறப்புலியாகி நீ நாவற்குழிதனில் நேர்நின்று போரிட்டாயே
உன் இலட்சியப் பாதையில் சென்ற உன்தம்பி
உன் நாமத்தைச் சூட்டி தச்சன் காடதனில்
போரிட்டு இன்று மாவீரனாய் மலர்ந்திட்டானே!
மணம் மாறா மலராய் மடிந்திட்டாலும்
ஈழத்தில் உம் உதிர்வு தமிழருரிமைக்கு
உரமாகட்டும் உம் கல்லறை மலர நாம்
கண்ணீர் சிந்துகின்றோம்.

பாபு வீதி,
கண்ணன்,
இத்தாவில், பளை.

உம் நினைவால் துடித்து துயருறும்
**தாய், சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள்**
(சி/4024)

## A/L 91 - பரீட்சைக்குத் தயாராகும்

மாணவர்களுக்கான விசேட
### இலவச கருத்தரங்குகள்

சனி / ஞாயிறு
2-30 — PHYSICS — திரு. ரவீந்திரநாதன் B. Sc.
4-00 — CHEMISTRY — திரு சிவசோதி B Sc

செவ்வாய்
4-00 — ZOOLOGY — திரு. அல்போன்ஸ் B. Sc.
4-00 — APP. MATHS — திரு. அமிர்தலிங்கம் B. Sc.

வியாழன்
4-00 — BOTANY — திரு. ஸ்ரீகரன் B. Sc
4-00 — PUREMATHS — திரு.அமிர்தலிங்கம் B. Sc.

**ஆரம்பம்: 07.03.19[illegible]**

★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் இலவசமாக பங்கு பற்றலாம்.

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-4019)

## நினைவு கூருகின்றோம்!
## 1992-03-08

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் அச்செழுப்பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**களன்** (இரத்தினசபாபதி கணேசகுமார் - வளலாய், அச்சுவேலி)

அம்பாறை, நாவிதன் வெளிப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு நாவற்குழி சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப்.உத்தமன்** (பூதப்பிள்ளை லவக்குமார் - ஏழாலை மேற்கு)
**கண்ணன்** (கந்தையா பாபு - இத்தாவில், பெரியபளை சாவகச்சேரி)

வல்வெட்டித்துறையில் சிறிலங்காப்படையினரின் காவலரண்மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**ஸ்ராலின்** (விருத்தாசலம் சிவசங்கர் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

1989ஆம் ஆண்டு கீரிமலையில் தேசவிரோத சக்திகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்கள் மூவர்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4017)

# ரஷ்யாவின் விஞ்ஞானத்தின் எதிர்காலம்

## மயிரிழையில் ஊசலாடுகிறது

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞானிகள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்கள். தங்களுக்கும் காலம் வரும் என்ற நோக்கில் காலத்தைக் கடத்துகிறார்கள் சோவியத் ஒன்றியம் சிதைவுண்டு தனித் தனி நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் விஞ்ஞானத்துக்கு ஒதுக்கப்பட்ட முதலீடு குறைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றது. இதுவரை காலமும் தங்களால் கட்டிக்காக்கப்பட்ட தொழில் நுட்பங்களையும், இரகசியங்களையும் சோவியத் விஞ்ஞானிகள் தற்போது மேற்குலக நாடுகளுடன் பகிர்ந்துகொள்ள எத்தனிக்கிறார்கள்.

பொருளாதார வீழ்ச்சியினால் சோவியத் படைவீரர்களின் உத்வேகம் குறைந்து போயுள்ளது. அத்துடன் வேலையில்லாத் திண்டாட்டம் இங்கு உச்ச நிலையில் உள்ளது. வெளிநாடுகளில் தங்கள் சேவையின் அவசியத்தை வெளிக்காட்டுவதற்கு இவ் விஞ்ஞானிகளிற் சிலர் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு முற்படவும் கூடும்.

அணு விஞ்ஞானத்தில் மேற்குலக நாடுகளிலும் பார்க்க சிதைந்துபோனசோவியத்யூனியன் முன்னிலையில் இருக்கின்றது என்றுகூறும் மொஸ்கோவிலுள்ளகுர்சரோவ்அணுவியல் ஆராய்ச்சிக்கல்லூரி(Kurchatov institute) யின் துணைத்தலைவர் திரு. அன்ட்றிகாசரின்ஸ்கி (Andrei Gagarinsky) தொழில் நுட்பத்தை வெளிநாடுகளுக்கு விற்பதற்கு தாங்கள் ஆர்வம் கொண்டிருப்பதாக மேலும் கூறுகின்றார்.

சோவியத் ஒன்றியம் சிதைவுறு முன்பே அந்நாட்டு விஞ்ஞானிகள் தங்கள் கண்டுபிடிப்புக்களை வெளி உலக நாடுகளுக்கு – குறிப்பாக அமெரிக்காவுக்குப் பணத்திற்காக விற்பதற்கு முயன்றுள்ளார்கள்.

அவர்கள் விற்பதற்கு முன்வந்த சில பொருள்களின் பட்டியலைப் பார்த்த மேற்குலக நாடுகள் அதிர்ந்து போயின. எவ்வளவு பணம் கொடுத்தோ அல்லது உளவு மூலமோ முன்னர் பெறமுடியாத பொருள்கள் இப்பட்டியலில் அடங்கியுள்ளன. முதல் ரக புளுட்டோனியம் (Plutonium) அணு உலைகள் தொடக்கம் ஏவுகணைப் பொறிகள் வரையும் விற்பனைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. விண்வெளி ஆராய்ச்சி நிலையமான மிர் (Mir) உட்பட அவர்களுடைய விண்வெளி ஆராய்ச்சிச் செயல் திட்டம் முழுவதையும் விற்பனை செய்வதற்கு உத்தேசித்துள்ளார்கள் என ஒரு விஞ்ஞானி ''லண்டன் சன்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு கூறியுள்ளார்.

சிதைந்துபோன முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருந்த இராணுவத்தினரின் செலவீனங்களைக் குறைத்தமையாலேயே இந்த விற்பனையைச் செய்யவேண்டியகட்டாயநிலை தோன்றியதுதிரு காகரின்ஸ்கியும்(Gagarinsky) அவரின் சக விஞ்ஞானிகளும் இப்பொருள்களை அமெரிக்காவுக்கு விற்பதற்குப் பிரயத்தனம் செய்கிறார்கள். இவ்விற்பனைப் பொருள்களில் முதன்மையானது 'ரோபாஸ்' (Topaz) என்ற அணுமின் நிலையமாகும். விண்வெளியிலுள்ள செய்மதிகளைநீண்டகாலத்துக்குச் செயல்படக்கூடிய வல்லமையைக் கொடுக்கும் ஆற்றல் இந்த அணுமின் அமைப்புக்கண்டு இதன் செயற்பாட்டின் நுணுக்கங்களை 1989 ஆம் ஆண்டில் அறிந்த பொழுது அமெரிக்கர்கள் அதிர்ந்து போனார்கள் எனத் திரு. காகரின்ஸ்கி கூறுகின்றார்.

'பிறையோறிற்றி' (Priority) என்ற விஞ்ஞான இதழ் ஆசிரியர் ஒலெக் கிளபோவ் (Oleg Glabov) 21-ம் நூற்றாண்டின் சக்தித்தேவைகளைப பூர்த்தி செய்யக் கூடிய அணு உலைகளின் செயற்பாடுகளில் ரஷ்ய விஞ்ஞானிகள் முன்னணியில் உளளனர் எனக்கூறுகின்றார். உலகத்திலேயே தலைசிறந்த திரவ எரிபொருளில் இயங்குகின்ற உந்து சகதி இயந்திரமானஆர்.டி 170-ல்(R.D110) அமெரிக்க விமானப்படையினர் ஆர்வம் காட்டுவதுடன் இவற்றைப் பார்வையிடத் தங்கள் அதிகாரிகளை மொஸ்கோவுக்கு அனுப்பியுள்ளதாகவும் அறிய முடிகின்றது

செய்மதி மூலம் எடுக்கப்பட்ட பூமியின் சில பகுதிகளைக் கொண்ட படங்களைக் ''கிளாவ் கொஸ்மோஸ்'' (Klav Kosmos) என்ற விண்வெளி தொடர்பு நிலையம் மலிவாக விற்கிறது இது முன்னாளில் பரம இரகசியமாக வைத்திருக்கப்பட்டது.

எஸ். எஸ். 20 (S.S.20) ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று தங்கள்தொழில் நுட்பங்களை மேற்கு நாடுகளுக்கு விற்பனை செய்யும்படி தன்னைக் கேட்டதாகப் பத்திரிகை ஆசிரியர் திரு. கிளபோவ் (Mr Glabov கூறுகின்றார்.

### சந்தர்ப்பங்கள்

தங்களுக்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பங்களால் மகிழ்ச்சியடையும் அதேவேளையில் சோவியத் ஒன்றியத்தின் விஞ்ஞான உலகத்தை மற்றவர்கள் பகிர்ந்து கொள்வதையிட்டு மேற்கு நாட்டவர்கள் விசனமடைகின்றார்கள். அணு ஆயுதங்களையும் அதைச்சார்ந்த பொருள்களையும் பெருக்க வேண்டும் என்று அவாவுற்றிருக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும், அராபிய நாடுகளுக்கும் இவை பரவும் ஆபத்து உண்டென்று அவர்கள் அச்சமடைகின்றார்கள்.

இந்த அச்சத்துக்குக் காரணம் உண்டு. கடந்த டிசம்பர் மாதத்தில் இஸ்ரேல்200கோடி டாலர்கள் மதிக்கத்தக்க பிரமாண்டமான நீர் அமுக்க நிலையம் ஒன்றை ருசியாவிடமிருந்து வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இது அணு சக்தியை உண்டாக்கும வல்லமையுடையது லிபியா,சிரியா, எகிப்து, ஆகிய நாடுகள் தங்கள் அணுத்திட்டங்களுக்கு உதவுமாறு குர்சரோவ் அணுவியல்ஆராய்ச்சிக்கல்லூரியைக் கேட்டிருப்பதாகத் திரு. காகரின்ஸ்கி லண்டன் ரைம்ஸ் செய்தித்தாளுக்குக் கூறியுள்ளார்.

ஈராக், லிபியா போன்ற நாடுகள் தங்கள் நாடுகளில் ருசியஅணு விஞ்ஞானிகளைப் பணியாற்ற அழைப்பு விடுத்துள்ளஅதேவேளையில்வேறுசிலர் மேற்குலகில் அல்பர்கேர்கிலும் (Alberguergue) நியூமெக்சிக்கோ விலும் பணியாற்றவிருக்கின்றனர் என ''நியூயோர்க் ரைம்ஸ்'' செய்தித்தாள் கூறுகிறது.அணுசக்திக்கட்டுப்பாடுகள் பற்றிய அனைத்துலக ஒப்பந்தங்களை ருசியாமதித்து நடக்கும் என திரு காகரின்ஸ்கி கூறுகின்றார்இருப்பினும்அணு உற்பத்திப்பொருட்கள் ருசியாவிலிருந்து கடத்தப்படுவதாக அறியமுடிகின்றது.

விஞ்ஞான ஆராய்ச்சிக்கு மேற்குலகநாடுகள்உதவவேண்டுமென்று ருசிய விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றார்கள். முன்னைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நுண்ணியல் பொருள்களை ஏற்றுமதி செய்வதை மேற்குலக நாடுகளின் சட்டங்கள் தடைசெய்கின்றன செய்மதிகளை ஏற்றுமதி செய்வதற்கு ஒப்பானதெனக் கருதுவதால் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் செய்மதிகளை ருசியாவிலுள்ள செய்மதி அனுப்பும் தளங்களிலிருந்து அனுப்புவதையும் இச்சட்டங்கள் தடைசெய்கின்றன

### தயக்கம்

அமெரிக்காவின் விண்வெளித்திட்டங்களைப் பின்னடையச் செய்யும் என்ற அச்சம் காரணமாகவே சோவியத்தின் விண்வெளித் தொழில்நுட்பங்களை இறக்குமதிசெய்வதற்கு அமெரிகக நிறுவனங்கள் தயங்குகின்றன. ஒன்றரைக்கோடி டாலர்கள் பெறுமதியான 'ரோபாஸ்' அணுமின் அமைப்பை வாங்கும் திட்டம் மூன்று வருடங்களாகப் பேச்சுவார்த்தை நிலையிலேயே உள்ளது அமெரிக்காவின்ஆகக்குறைந்த மதிப்புள்ள இதை ஒத்த அமெரிக்கப்பொருளின் விலையில் நூறில்ஒரு பங்கே இதன்விலையாக இருந்தபோதும் இதை இன்னும் வாங்காமல் அமெரிக்கா தயக்கம் காட்டுவதிலிருந்து அதன் போக்கு புலனாகின்றது.

ஆனால் வேறு அணுப் பொருட்களை அமெரிக்கா வாங்கி வருகின்றது. நியூமெக்சிக்கோ பல்கலைக்கழக அணுத்திட்டப் பொறியியலாளரான கலாநிதி மொகமட் எஸ். அல்கெங் (Dr Mohamed S. El-Genk) அவர்கள் குர்சரோவ் அணு உற்பத்திப் பொருள்களை வாங்கியுள்ளார். ருசியாவின் நாணயமான ரூபிளின் (Rouble) மதிப்பிலும் பார்க்க அமெரிக்க டாலரின் (Dollar) மதிப்பு அதிகமாகவுள்ளதால் சிறு பொருள்களை விற்பதன் மூலம் கிடைக்கும் பணமே ருசியாவின் அணுத்தொழிற்சாலைகள் பலவருடங்களுக்கு இயங்கப்போதுமானது என இவர் கூறியுள்ளார்

அத்துடன்அவர்களின்பொருள்களை வாங்குவதன் மூலம் அங்கே விஞ்ஞான வளர்ச்சி நடைபெறுவதை ஊக்குவிக்கலாம் எனவும் இதைச்செய்ய தவறும் பட்சத்தில் அங்கே நிலைமை மோசமடைந்து அது பயங்கரப் பின் விளைவுகளை ஏற்படுத்த வழிவகுக்கும் எனவும் இவர் எச்சரித்துள்ளார்.

சோவியத்திலுள்ள அணு விஞ்ஞானிகளைக் காப்பாற்ற மேறகுலக நாடுகள் தவறுமானால் இரகசியமானமுறையில் அணுசக்தித்திட்டங்களைத் தயாரித்து வைத்திருக்கும் விரும்பத்தகாத நாடுகளுக்கு அவர்கள்உதவிபோய்ச் சேர நேரிடலாம் என்று திரு. காகரின்ஸ்கி எச்சரித்துள்ளார்.

''எங்களிடம் அதிசிறந்தவிஞ்ஞானிகள் உள்ளனர் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டால் அவர்கள் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காக யாரிடமாவது செல்லநேரிடும்'' எனத் திரு. காகரின்ஸ்கி மேலும் கூறியுள்ளார்

### ஆற்றல் வளம்

இலகுவில் கட்டுப்படுத்தக்கூடியதாகவிருக்கும் அணு உற்பத்திப்பொருட்கள் கிடைக்கக்கூடாதவர்களுடைய கைக்கு மாறுவதால் ஏற்படும் அபாயத்தைவிட அணு உற்பத்திப் பொருள்களின் ஆற்றல் வளம் பணத்திற்காகஉபயோகப்படுத்தப்படுவது ஆபத்தானது என மேற்குலக நாடுகளின் விஞ்ஞானப் பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

(தொடரும்

## ஈராக்கிடம் அணுவாயுதம் கைவசம் இல்லை -அணுசக்தி நிறுவனம்

(அபுதாபி)

ஈரான் மற்றும் ஈராக் நாடுகளிடம் அணுவாயுதங்கள் கைவசம் இல்லை என்றும் ஈராக் அணுவாயுத ஆலை ஒன்றைக் கட்ட முயற்சிக்கவில்லை என்றும் சர்வதேச அணுசக்தி நிறுவனம் கூறியதாக அபுதாபிப் பத்திரிகை தெரிவிக்கிறது.

ஈராக் அணுவாயுதங்களை உற்பத்தி செய்ய முயற்சிக்கவில்லை என்றும் அணுவாயுதங்களைத் தயாரிக்கக் கூடிய எவ்வித சாதனங்களும் ஈராக் வசமில்லை என்பதைத் தாம் பல சோதனைகளின் போது தெரிந்து கொண்டதாகவும் அணுசகதிநிறுவனம்கூறுகிறது

மேலும் ஈராக்கின் அணுவாயுத உற்பத்திக்கான முயற்சிகளைத்தாம் கண்காணித்து வருவதாக சர்வதேச அணுசக்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

A\L Physics

திரு. விமல்ராஜ் B.Eng.

(1983 வரை எமது நிறுவனத்தில் கற்பித்தவர், பின் உயர் கல்விக்காக வெளிநாடு சென்று மீண்டவர்)

BOND INSTITUTES
58A, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம். (4018)

## அஜர்பைஜான் ஜனாதிபதி இராஜினாமா

அஜர்பைஜான் ஜனாதிபதி தமது இராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்கு வெளியில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அஜர்பைஜானிகள்வாழும்பகுதிகளைப் பாதுகாக்க தவறிவிட்டார் என்று ஜனாதிபதியின் மீது எதிர்க்கட்சிகள் குறைகூறின.

அஜர்பைஜானுக்கும், ஆர்மேனியாவுக்குமிடையேயுள்ள நகர்கானுபாத் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் பெரும் மோதல்கள் இடம் பெற்றது தெரிந்ததே.

## பொலிஸ்கமிஷனர் கடத்தல்

(சிறிநகர்)

ஜம்மு-காஷ்மீர்மாநிலத்தின் சிறிநகர் பகுதியின் கூடுதல் துணைக்கமிஷனர் மொகமட் அமீன் பேர்ட்,நேற்று முந்தினம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். மசூதி யொன்றில் தொழுகையில் ஈடுபட்டபின்னர். மசூதி வளாகத்திலிருந்து ஆயுதபாணிகளான சிலரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

## ஜனதா தள் ஆதரிக்காது

(டில்லி)

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வேட்பாளரை ஜனதா தள் ஆதரிக்க மாட்டாது என்று அக் கட்சியின் பொதுச் செயலாளர் சரத்யாதவ் பட்னாவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியுள்ளார், அவர் மேலும் கூறுகையில் வரவு - செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் கட்சியின் நிலை மேலும் கடினமாகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

Computer Classes
புதிய பிரிவுகள்
BASIC PASCAL
dBASE III+
LOTUS 1. 2. 3.

ஆரம்பம் : 9- 3- 1992

விசேட செய்முறைப் பயிற்சிகளுடன் கூடியது

விபரங்கட்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
GROUP
14, St. Peter's lane
Hospital Road, Jaffna.

(சி/4023)

யாழ்ப்பாணம்

# மேஜர் சதாத்திற்கு மன்னார் மக்கள் அஞ்சலி

(மன்னார்)

அண்மையில் மணலாறு மாவட்டம் மண்கிண்டிமலை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் சதாத் அல்லது வீமன் (அமிர்தநாதன் அருளப்பு) அவர்களின் புகழுடலுக்கு மன்னார் பிரதேச மக்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர். இவரது புகழுடல் மேஜர் சதாத்தின் சொந்த ஊரான சாலமன் அடம்பனிலும், பின் அடம்பன் பிரதேச செயலகத்திலும், மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் ஆள்காட்டி வெளியிலுள்ள மாவீரர் துயிலும் மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த இறுதி ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# காணித்தகராறால் கைகலப்பு மூவருக்கு கத்தி வெட்டு

(யாழ்ப்பாணம்)

காணித்தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் மூவர் கத்தி வெட்டுக்கு இலக்காகிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் திருநெல்வேலிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த பல மாதங்களாக குடியிருக்கும் காணி ஒன்றின் தகராறு தொடர்பாக காவல்துறையினரிடம் முறையிடப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் அப்பகுதியில் வாழும் கிருஷ்ணர் என்பவருக்கும் க. விஜயானந்தனுக்குமிடையில் ஏற்பட்ட தகராறே கத்தி வெட்டில் முடிவடைந்தது. இதன்போது க.விஜயானந்தன் (22) உ. மங்களேஸ்வரி (30) ஞானேஸ்வரி (29) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச)

# திருமணத்திற்கு தடை: காதலர்கள் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

திருமணத்திற்கு பெற்றோர் தடையாக இருந்தமையால் மனமுடைந்த காதலர்கள் இருவரும் ஒன்றாக தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று நேற்று அதிகாலை மானிப்பாய் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: சாவக்காடு சுதுமலையைச் சேர்ந்த எஸ். ரட்ணவேல் (வயது 24) த. ஜெயந்தி (வயது 18) ஆகிய இருவருக்குமிடையில் ஏற்பட்ட உறவை பெற்றோர் கண்டித்ததால் மனமுடைந்த இவர்கள் இருவரும் அறையினுள் ஒன்றாக தற்கொலை செய்து கொண்டனர். தற்போது மருத்துவ பரிசோதனைக்காக இவ்விரு சடலங்களும் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ச)

# விளக்கால் ஏற்பட்ட விபத்து மாணவிக்கு தீக்காயம்

[யாழ்ப்பாணம்)

கவலையீனத்தால் தீக்காயங்களுக்குள்ளான மாணவி ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நெடுங்கேணியைச் சேர்ந்த லோகநாதன் உஷா (வயது 18) என்ற பெண் படித்து விட்டு விளக்கை அணைக்காது தூங்கி விட்டாள். தூக்கத்தின் போது விளக்கு தவறுதலாக தட்டுப்பட்டதாகவும்இதனால் தீப்பற்றிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உடல் முழுவதும் எரிகாயங்களுடன் இவர் தற்போது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ச,

# கப்பற் கூட்டுத் தாபனமும் தனியார் மயமாகிறது

(கொழும்பு)

கப்பற்போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் தனியார் நிறுவனமாக மாற்றப்படவுள்ளது. இந்தத்தகவலை துறைமுகங்கள் கப்பற்போக்குவரத்துத் துறை அமைச்சர் அலுத் அலுவிகார தெரிவித்தார்.

அடுத்த இரண்டொரு மாதங்களுக்குள் இந்த கூட்டுத்தாபனம் கம்பனியாக மாற்றியமைக்கப்படும் கப்பற்போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் இப்பொழுது வருடாந்தம் 7கோடி10இலட்சம் ரூபாவை லாபமாக பெற்றுவருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பண்டிதர் குடியிருப்பு; பாடசாலை மாணவருக்கு கொழும்பு வர்த்தகர் உதவி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள தீவகவர்த்தகர்கள் கெற்பலி பண்டிதர் குடியிருப்பு கமலாசனி வித்தியாலய மாணவர்களுக்கு இலவசமாகப் பாடசாலை உபகரணங்களை வழங்கி உதவினர்.

இடம்பெயர்ந்த தீவக மாணவர்களுக்கென கொழும்பு தீவக வர்த்தகர் அனுப்பிய நிதி உதவியிலிருந்து சுமார் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள், பென்சில்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் மேற்படி வித்தியாலய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

# பொருட்காட்சி

(பண்டத்தரிப்பு)

தென்னிந்தியத் திருச்சபை யாழ்அத்தியாட்சாதீனம்பெண்கள் ஐக்கியத்தின்பொருட்காட்சி ஒன்று பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறுகிறது.

நேற்றுமாலை நான்கு மணிக்கு மகாகனம் டி.ஜே. அம்பலவாணரினால் திறந்து வைக்கப்பட்ட இப் பொருட்காட்சி இன்று மாலை நான்கு மணி வரையும் நடைபெறும். (ச)

# மூலவள நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத் திறப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 10 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு யாழ். கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதனை வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் திறந்து வைக்கவுள்ளார். (ச)

# தராசுகளுக்கு முத்திரையிடல் நீடிப்பு

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 தொடக்கம் பி.ப 2.30 மணி வரையும் வர்த்தகர்களின் நன்மை கருதித் தராசுப்படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் நீடிக்கப்பட்டுள்ளன.

இதில் கல்வியங்காடுச் சந்தை வியாபாரிகளும் தமது தராசுப்படிகளை முத்திரையிடக்கொண்டுவருமாறு யாழ். மாவட்ட நிறுவைகள், அளவைகள் திணைக்களப்பொறுப்பதிகாரி திரு.கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (24)

# முதலுதவிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அவசரகால சூழ்நிலையில் பரியோவான் முதலுதவிப் படையினர் ஆற்றவேண்டிய கடமைகளை விளக்குமுகமான கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட சகல அம்புலன்ஸ் தாதிகள் பிரிவுகளைச் சேர்ந்த பிரிவு உத்தியோகத்தர் தரத்திற்கு மேற்பட்ட சகலரையும் தவறாது கலந்து கொள்ளும்படி மாகாண ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# மாநாடு

(கண்டி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பேராளர் மகாநாடு வரும் 15 ஆம் திகதி நுவரெலியா செயஸ்ரார் அரங்கில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன என்று இ. தொ.கா. உபதலைவர் ஏ.எம்டி, ராஜன் தெரிவித்தார்.

# புதிய தலைவர் தெரிவு

(கொடிகாமம்)

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவராக திரு.எஸ். ஆனந்தராசா அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நிர்வாக உறுப்பினர் எழு(7) பேரும் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# பரிச்ளிப்பு விழா

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா 9ஆம் திகதி திங்கட்கிழமை வித்தியாலய அதிபர் திரு.எ.யோசுவா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே பிரதம விருந்தினராக யாழ் கல்விப் பணிப்பாளர் திரு.இ.சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.ச.செல்லத்துரையும் கலந்து கொள்கின்றனர். திருமதி தேவராணி-சுந்தரலிங்கம் பரிசில்களைவழங்குவார். (2 )


## அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அச்சுக் கோர்ப்பதில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். இருபாலாரும் சமுகம் தரலாம்.

தொடர்பு:

ஈழநாதம்
31 மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம். (2275)



## "Practice Makes One Perfect"

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 1991

இப்பரீட்சைக்கான

**பயிற்சிப் பரீட்சைகள்**

★ 08 - 03 - 92 ★ 15 - 03 - 92
★ 22 - 03 - 92 ★ 29 - 03 - 92
★ 05 - 04 - 92 ★ 12 - 04 - 92

ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 1·00 மணிக்கு

இந்நிறுவனங்களில் எம்மால் நடத்தப்படும்

BOND INSTITUTES — யாழ்ப்பாணம்
EXPRESS INSTITUTE — இருபாலை
KUGAN INSTITUTE — ஆவரங்கால்
SATHA PONS — அல்வாய்
BRILLIANT — சங்கத்தானை
VINYLS — சுன்னாகம்
BITSMANS INSTITUTE — மானிப்பாய்
PAARATHY — சித்தன்கேணி

மேலதிக விபரங்களுக்கு:

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(சி-4020)



## பயிற்சி வகுப்புக்கள்

மனையியல் டிப்ளோமா வகுப்புக்கள், கேக் - ஐசிங் சிற்றுண்டி வகை, சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம், தையல் பூக்கள் செய்தல், வண்ணம் சாயமிடல், மற்றும் கைவேலைகள் நடைபெறும். திருமதி பவளம்சிவசுப்பிரமணியம் அனித்தாபாடசாலை பூநாறி மரத்தடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

(சி/4021)


## மரண அறிவித்தல்

### தவமணி கனகரத்தினம்

சுழிபுரத்தைச் சேர்ந்த தவமணி சிவபதம் அடைந்தார். அன்னார் மலாயன் பென்சனர் ஆறுமுகம் கனகரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்ற சிவகுரு சுப்பையா, இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற மயில்வாகனம்(Director Finance),சிவகுருநாதன் (Director Agrarian Services) அவர்களின் சகோதரியும், காலஞ்சென்ற இராசபட்சம் (Director P.W.D) அவர்களின் மைத்துனியும், Dr. வசந்தமாளிகா கருணாகரன் (யாழ்போதனா வைத்தியசாலை) இராஜசூரியர் (பொறியியலாளர் Bahamas), உதயசங்கர் (பொறியியலாளர் U.K) ஆகியோரின் தாயாரும், Dr. கருணாகரன், Dr. சாந்தினி - இராஜசூரியர் ஆகியோரின் மாமியாரும், வித்யன், பாலமுருகன், கிருஷ்ணகாயத்திரி ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 08.03.1992 (இன்று) காலை 9 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருவடி நிலையில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றாரும், உறவினரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

காளுவன் சந்தி,
சுழிபுரம்.

Dr. M.V. கருணாகரன்
(மகள்)

(2274)

சிந்தனைக்கு

விழிமின்! எழுமின்! இல்லையேல்,
என்றும் வீழ்ச்சி உறுமின்.
—ஜான் மில்டன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 08-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# சர்வதேச மகளிர் தினம்

இன்று சர்வதேச மகளிர் தினம். அடக்கப்பட்டுவரும் பெண்ணினத்தின் எழுச்சி நாள். வரலாற்றுக் காலம் தொட்டு ஏதோ ஒரு வடிவில் அடக்கப்பட்டுவரும் பெண்களின் இவ் எழுச்சிநாளை கொண்டாடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணியினரும் கிளிநொச்சியில் தமிழீழப் பெண்கள் மாநாடு ஒன்றை நடத்துகின்றனர்.

ஆண்-பெண் சமத்துவம், பெண்களுக்கான அரசியல் சட்ட ரீதியான உரிமைகள், கல்வி, வேலைவாய்ப்பு சம அளவு ஊதியம் போன்ற பெண்களின் அடிப்படை உரிமைகளை வற்புறுத்தி பெரும்பாலான நாடுகளில் சர்வதேச மகளிர் தினம் வழமையாகக் கொண்டாடப்படுகின்றன. ஆனால் தமிழீழப் பெண்களைப் பொறுத்து மேற்கூறப்பட்ட சமூக, பொருளாதார அரசியல் அடக்கு முறைகளுக்கு எதிராக மட்டுமல்ல தமிழ் தேசிய இனத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ அடக்குமுறைக்கும் எதிராகவும் போராட வேண்டிய நிர்ப்பந்தம் இன்று உள்ளது.

தமிழீழப் பெண்கள் பொதுவாகவே சீதனம், மறுமணமறுப்பு, மதக்கோட்பாடுகள், சடங்குகள் என்பவற்றால் காலாகாலமாக அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றனர்.

ஆனால் இசுற்கெதிராக கடந்தகலத்தில் தமிழ் பெண்கள் விழிப்படைந்ததாகவோ, அதற்கெதிராக பெரும் போராட்டம் நடத்தியதாகவோ இல்லை.

இதேவேளை தேசிய இன விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகக் கூர்மையடைந்த வேளையில் தமிழ்ப் பெண்கள் விழிப்புணர்ச்சி பெற்றனர். பெருமளவில் போராட்டத்தில் இணைந்தும் கொண்டனர். போராட்டத்தில் இப் பெண்களின் இணைந்து கொண்டமையும் போராட்டத்தின் காரணமாக சமூகத்திலும், பொருளாதார நிலையிலும் ஏற்படுத்தியுள்ள மாற்றமும் தமிழீழப் பெண்களின் அந்தஸ்தை சற்று உயர்த்தியுள்ளன என்பதை மறுக்க முடியாது எனினும் விடுதலைப் போராட்டம் பெண்கள் மீது மேலதிகமான பொறுப்புக்களையும் சுமத்தியுள்ளது என்பதையும் நிராகரிக்க முடியாது.

ஆனால், தேசிய இனப் போராட்டம் கூர்மையடைந்ததனாலும், பெண்கள் போராட்டத்தில் பெருமளவில் பங்குபற்றியதனாலும், ஏற்பட்டுள்ள மாற்றம் கடந்த காலத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அடக்கு முறைச்சிந்தனைப் போக்கை முற்றிலும் மாற்றியிருக்கின்றனவா என்றால் இல்லை என்றே கூறுதல் வேண்டும்.

ஆண்களினால் மட்டும், குடும்பத்தின் பொருளாதாரச் சுமையை சுமக்க முடியாது என்ற நிலை உருவாகிய போது பெண்களும் வேலைக்குச் செல்லுதல் அங்கீகரிக்கப்பட்டது. அவளின் வருமானமும் வாழ்க்கையை நடத்த எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் சமூகத்தில் ஆணுக்கு நிகரான சமூக அந்தஸ்து அவளுக்கு வழங்கப்பட்டதாகவோ அன்றிப் பெண்ணின் வீட்டுச்சுமைகளை ஆண்கள் பரிமாறிக் கொண்டதாகவோ, அல்லது அடக்கு முறைச் சிந்தனைகளில் இருந்து ஆண்கள் விலகியதாகவோ இல்லை.

இதேவேளை இன்று போராட்டத்தில் பங்கு கொள்ளும் பெண்களின் நிலையை அவ்வாறு கணிப்பிட்டுவிட முடியாது. அவர்கள் சமூக அடக்கு முறைகளை உடைத்தெறிந்து தமிழ் தேசிய இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்கு முறைக்கு எதிராகப் போராடுகின்றவர்கள் சமூகத்தில் தமக்குரிய கடமையை சமமாகப் பொறுப்பேற்றுள்ளார்கள். ஆனால் பெண்கள் ஆயுதபாணிகளாக களத்தில் நிற்பதை சமூகம் எவ்வாறு நோக்குகிறது என்பது இன்னும் கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் பெண்களை உத்தியோகம் செய்யவும் கூலிவேலை செய்யவும் அனுமதித்தது போன்றே போராட்ட காலத்தில் ஆயுதம் தாங்கிப்போராட அனுமதித்துள்ளார்களா? இவ்வாறு எழும் கேள்வியை புறக்கணித்து விட முடியாது. ஏனெனில் பெண்கள் பெருமளவு தேசிய இன விடுதலைப்போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர்த்தியாகம் பல புரிந்த பின்னரும், சமுதாய அமைப்பில் பெண்களின் நிலை பெருமளவில் மாற்றமடைந்ததாகத் தெரியவில்லை.

இந்நிலையில் தமிழீழப் பெண்களின் விடுதலையானது தனியாக தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை வெற்றிகொள்ளும் போது தானாக நிறைவேறிவிடும் என எதிர்பார்ப்பது தவறானது என்றே கொள்ளவேண்டும். தேசிய விடுதலைப்போராட்டத்தில் தமது பங்கை ஆற்றிவரும் பெண்கள் இதே காலத்தில் சமூகத்தில் தமது உரிமைக்காகவும் தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதே தமக்கு எதிரான அடக்குமுறையில் இருந்தும் அவர்கள் விடுபடமுடியும்.

தமிழர்கள்

# ஆபத்துக்குள்ளாகும்போது பிரபாவை நினைக்கிறார்கள்

## - பண்ருட்டி இராமச்சந்திரன்

(சென்னை)

கர்நாடகப் பிரச்சினையில் தமிழருக்கு உதவ வேலுப்பிள்ளை பிரபாகரனை அழைக்க வேண்டும் என்று ஒரு முதியவர் கூறியதாக மட்ராஸ் இந்துப் பத்திரிகை வெளியிட்ட செய்தியை மேற்கோள் காட்டி பண்ருட்டி இராமச்சந்திரன் தியாகராஜ நகரில் கூட்டம் ஒன்றில் பேசும் போது தெரிவித்தார்.

தமிழர் ஆபத்துக்குள்ளாகும் போதெல்லாம் பிரபாகரனை நினைக்கிறார்கள். ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் செயலானது எலியைப் பூனையிடம் கையளிப்பது போன்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளை ஆதரிக்கிறோம் முடியுமெனின் கைது செய்

## - தமிழக அரசுக்கு டாக்டர் ராமதாஸ் சவால்

[திண்டுக்கல்]

முடியுமானால் புலிகளின் ஆதரவாளன் என்று கூறி செல்வி ஜெயலலிதா என்னைக் கைது செய்து பார்க்கட்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் திண்டுக்கல்லில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது கேட்டார்.

தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடும் தமிழ் ஈழ மக்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். தமிழ் மக்களின் உரிமையை மறுப்பதற்கு ஜெயலலிதாவுக்கு எந்த உரிமையுமில்லை என்றார் அவர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த டாக்டர் ராமதாஸ், நானும் எனது கட்சியும் ஒளிவுமறைவின்றிப் புலிகளை ஆதரிக்கின்றோம். வேண்டுமானால் ஜெயலலிதா என்னைக் கைது செய்து பார்க்கட்டும். தமிழ்நாட்டுச் சிறைகளில் 50,000 பேரைத்தான் அடைக்கமுடியும். என்னைக் கைது செய்தால் 2,00,000 க்கும் அதிகமான தொண்டர்கள் சிறை செல்லத் தயாராகவுள்ளார்கள் என்றார்.

# 3 ஆண்டுகளில் 39 கோடிசெலவு

(டில்லி)

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கென இந்தியமத்திய அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் முப்பத்தொன்பது கோடி ரூபாய் செலவிட்டுள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் தெரிவித்துள்ளார்.

நேற்று மக்கள் அவையில் உரையாற்றிய எஸ் பி.சவான் தொடர்ந்து பேசும் போது இதே காலத்தில் இலங்கையிலிருந்து 1.22,000 அகதிகள் வந்திருக்கின்றனர் என்றும், இவர்கள் தமிழகத்திலும், ஒரிசாவிலும் உள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

எல்லை தாண்டும் பேரணி

# மீண்டும் நடத்துவதென ஜே. கே. எல். எப். அறிவிப்பு

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினர் இம்மாதம் 30ம் திகதியன்று மீண்டும் எல்லை தாண்டும் பேரணியை நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்

எனினும் ஜே. கே. எல். எப்பின் இந்தப் புதுமுயற்சியை எதிர்த்தே தீருவது என்று ஆஸாத் காஷ்மீர் பகுதியின் முதலமைச்சர் சர்தார் அப்துல் கையூம் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் மக்களைத் தூண்டி வருவதாகவும் ஜே கே எல்-எப் மீது முதலமைச்சர் கயூம் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் கைதானவர்களுக்கு

# இலவச சட்ட உதவி கோரி உயர் நீதிமன்றத்தில் மனு

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கு உட்படத் தடா சட்டத்தின் கீழ் கைதாகி உள்ளவர்களுக்கு இலவச சட்ட உதவி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான சட்ட உதவி அமைப்பின் உறுப்பினர் சென்னன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

பருத்தித்துறை

# வைத்தியசாலை அபி. சபை கொடிவாரம் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் கருதி வைத்திய சாலை அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்படும் கொடிவார ஆரம்ப விழா வைத்தியசாலை அபிவிருத்திச்சபைத் தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்திய சாலை அபிவிருத்திச் சபைக் கொடியையும், திரு ச.விசாகசுந்தரம் பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவின் கொடியையும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் அணிவகுப்பு மரியாதைகளும் இடம் பெற்றன.

விழாவிலே யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் வ. க. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ச.செல்லத்துரை, கரவெட்டி பிரதேச செயலாளர் திரு இ. ஐயாத்துரை பருத்தித்துறை பிரதேச செயலர் திரு செ. ஸ்ரீனிவாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பிரதம விருந்தினர் பேராசிரியர் கணேசலிங்கம் முதலாவது கொடியை இலங்கை மின்சார சபை யாழ். பொறியியலாளர் திரு எஸ். வல்லிபுரத்திற்கும், இரண்டாவது கொடியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு சி. பொ. பாலசிங்கத்துக்கும் மூன்றாவது கொடியை தொழில் அதிபர் திரு வின்சென்ற்டீ போலிற்கும் அணிவித்தார். வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் உதவிச் செயலாளர் திரு ஆ.நா. சு. திருச்செல்வம் நன்றியுரை வழங்கினார்.

வைத்திய சாலையின் அபிவிருத்திகருதி இக்கொடி வாரத்திற்கு பொது மக்கள் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கி உதவுமாறு வைத்திய சாலை அபிவிருத்திச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# யோகாசனப் பரிசோதனைநிலையம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினால் யோக சிகிச்சைப் பரிசோதனை நிலையமொன்று எதிர்வரும் புதன்கிழமை (11. 03. 92) அன்று திறக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் காலை ஏழு மணிக்கும் எட்டு மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆ தெய்வேந்திரம் அவர்களால் திறந்து வைக்கப்படுவதைத் தொடர்ந்து, இப் பரிசோதனை நிலையத்தின் கடமைகளையும், உபயோகங்களையும் பற்றி யோகாசனக் கலாநிதி சுவாமி சிதானந்த சரஸ்வதி அவர்கள் விளக்கமளிக்கவுள்ளார்.

பதிவு செய்யப்படாத

# எக்ஸ்றே கிளினிக்குகள் நடத்துவோருக்கு தண்டனை

இந்நாட்டில் பதிவுசெய்யப்படாத எக்ஸ்றே கிளினிக்குகள் பல இயங்கிவருவதாக சந்தேகிக்கப்படுகிறது இத்தகைய கிளினிக்குகளால் கதிரியக்க ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அணுசக்தி அதிகார சபையின் தலைவர் டாக்டர் டக்ளஸ் நெற்சிங்கா தெரிவித்துள்ளார்.

அணுசக்தி அதிகாரசபை கதிரியக்க பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதனால் லைசென்ஸ் பெறாத எக்ஸ்றே கிளினிக்குகளை நடாத்துபவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எமது விடுதலைஇயக்கத்துடன்... (1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

# ஆழமான புரிந்துணர்வில் ஆண்-பெண் சமத்துவம்

இந்த சமூகப் பரிசோதனை அனுபவங்களிலிருந்து நாம் ஓர் உண்மையைக் கண்டு கொள்ளலாம். அதாவது பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும் ஆண்களின் மனோவுலகில், பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில், ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப்போவதில்லை

பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில், அவர்களது சமூக, பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆயினும் அதே வேளை ஆண் - பெண் உறவிலும், அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண்-பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில் தான் சாத்தியமாகிறது.

# பெண்களின் விடுதலைக்கு மும்முனைப் போராட்டம்

எமது சமூகக் கட்டமைப்பில் பெண்ணினம் மிகவும் மோசமான ஒடுக்குமுறை வடிவங்களை எதிர்கொண்டு நிற்கிறது. மிகவும் பின் தங்கிய சமூக பொருளாதார வாழ்வு ஒரு புறமும், அரச அடக்குமுறை அழுத்தங்கள் மறுபுறமும், ஆணாதிக்க கொடுமைகள் இன்னொரு புறமுமாக பல பரிமாணங்களில் எமது பெண்கள் ஒடுக்குமுறையைச் சந்திக்கின்றார்கள் இங்கு பெண் விடுதலை என்பது ஒரே காலத்தில் பல்வேறு முனைகளில் தொடுக்கப்பட வேண்டிய ஒரு போராட்டமாக அமைந்து விட்டது.

எமது தேசிய சுதந்திர இயக்கம் பெண் விடுதலையைத் தனது அடிப்படை அரசியல் குறிக்கோள்களில் ஒன்றாக வரித்துக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

பெண் விடுதலை எனும் பொழுது அரச அடக்குமுறையிலிருந்தும், சமூக ஒடுக்குமுறையிலிருந்தும், பொருளாதார சுரண்டல் முறையிலிருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம். எனவே எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலைப் போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என்ற குறிக்கோள்களைக் கொண்ட மும்முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப் படுகிறது.

இந்த மும்முனைப் போராட்டங்களில் தேசிய விடுதலை அதாவது எமது மண்ணின் விடுதலை முக்கியமானது. எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. எமது மண்ணின் விடுதலை பெண்ணின் விடுதலைக்கு மட்டுமன்றி எமது இனத்தின் விடுதலைக்கும் அத்திவாரமானது.

# மகளிர் படை உருவாக்கம் புலிகளின் மாபெரும் சாதனை

இந்த மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புகளைச் செய்துவருகிறார்கள். விடுதலைப் புலிகளின்மகளிர் படைப்பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில்ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூற முடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்துநிற்கின்றது.

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றி பெறமுடியும். வீரமும், தியாகமும், துணிவும் தன்னம்பிக்கையும் கொண்ட புரட்சிப் பெண்களாக மாற முடியும். பெண் விடுதலைக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணி சேரும் பொழுதுதான் எமது போராட்டமும் முழுமை பெறும்.

# பெண்ணின விடுதலைக்கு முதற்படி விழிப்புணர்வு

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்தும் பெண்ணினம் விடுதலை வேண்டி நிற்கிறது. நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூட நம்பிக்கைகளும் இந்த மூடநம்பிக்கைகளிலிருந்து தோற்றம் கொண்ட சமூக வழக்குகளும் சம்பிரதாயங்களும் எமது பெண்களின் வாழ்க்கையை சீரழித்து வருகிறது. ஆணாதிக்க அடக்குமுறையாலும், வன்முறையாலும், சாதியம் சீதனம் என்ற கொடுமைகளாலும் தமிழீழப் பெண்ணினம் விபரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறது.

இந்த ஒடுக்கு முறைச்சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால் பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக ஏவப்பட்டுவரும் ஒடுக்கு முறையின் தன்மைகளைப்புரிந்துகொள்ள வேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதனால் பெண்ணினம் தனது இழிநிலைபற்றி விழிப்புக்கொள்ள வேண்டும். தலைவிதிஎன்றும், கர்மவினை என்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனு நீதி என்றும், பழைமைஎன்றும்,பண்பாட்டுக் கோலம் என்றும் காலம் காலமாக மனவுலக இருட்டுக்குள் முடங்கிக் கிடந்தபெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி.

விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்ட சக்தியாக உருப்பெற முடியும். அந்தப் போராட்ட சக்தியால்தான் ஒடுக்குமுறை விலங்குகளை உடைத்தெறிய முடியும்.

# ஆணாதிக்கம் அகன்றால் அடக்குமுறையும் அகலும்

ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும். இந்தச் சித்தாந்தப் போராட்டம் ஆண்களின் மனவுலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.

மனித உறவுகளில் அடிப்படையானது ஆண் - பெண் உறவு. இந்த உறவு சாதாரண சமூக உறவு அல்ல. இது மனித உயிர் இயக்கத்திற்கும், மனித இன விருத்திக்கும் மூலமானது. மனித இனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது.

ஆண் - பெண் உறவில் எழும் அபசுரங்களாகவே இன்று பெண்ணினம் எதிர்கொள்ளும் பல அவலங்கள் தோற்றம் கொள்கின்றன.

ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், கௌரவத்தையும் மதித்து, குடும்ப வாழ்வின் பொறுப்புகளைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக்கொண்டு வாழ்ந்தால் இந்தப் பால்வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும். இந்த அன்புறவின் ஆழமான அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் ஆணினம் புரிந்து கொள்ளும் பொழுது தான் ஆணாதிக்கமும் அதனால் எழும் அதிகார அடக்குமுறைகளும் அகன்றுவிட வாய்ப்புண்டு.

உலகப் பெண்ணினத்தின் எழுச்சிநாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் மாநாட்டிற்கு எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## அனைத்துலக மகளிர் தினம்

# யாழ். குடாநாட்டில் இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு முழுவதும் இன்று அனைத்துலக மகளிர் தின நிகழ்வுகள் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினால் வெகுசிறப்பாக நடாத்தப்படவுள்ளன. இம் மகளிர் தின நிகழ்வுகள்

★ வலிகாமம். மாலை ஏழு மணிக்கு இராமநாதன் கல்லூரி மைதானத்திலும்

★ தீவகம்:
இன்று மாலைஎட்டுமணிக்கு நாவற்குழி சின்ன அருள் சன சமூக நிலைய அருகாமையில்

★ கடற்புலிகள் பிரிவு:
மாலைஆறுமணிக்கு பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டு மைதானம்

★ வடமராட்சி;- இன்று மாலை ஏழு மணிக்கு பருத்தித்துறை பழைய பஸ் நிலையம்

★ தென்மராட்சி: இன்று மாலை ஏழு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இம்மகளிர் தின நிகழ்வுகளில் அனைத்துத் தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# காங்கேசன்துறை முகம் நேற்று திறக்கப்பட்டது

காங்கேசன்துறையிலிருந்து தரைமார்க்கமாக உணவுப் பொருள்கள் நான்கு லொறிகளில் நேற்று எடுத்துவரப்பட்டன.

நேற்றுக்காலை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் வாகனங்களுடனும் நான்கு லொறிகளில் ஒன்பது தொழிலாளர்களுடனும் சேந்தான்குளம், கீரிமலை வீதி வழியாக காங்கேசன்துறையை அடைந்தனர் அங்குவைத்து இராணுவ சாரதிகள் நண்பகல் 12 மணியளவில் லொறிகளை பொறுப்பேற்று களஞ்சியத்திற்கு கொண்டு சென்று உணவுப்பொருள்களை ஏற்றி வந்து மாலை நான்கு மணியளவில் இவர்களிடம் மீண்டும் ஒப்படைத்தனர்.

உணவுப் பொருள்களை ஏற்றச் சென்ற லொறிகளில் இரண்டில் இருபது தொன் அரிசியும் மற்றைய இரண்டிலும் இருபது தொன் மாவும் ஏற்றி வரப்பட்டுள்ளன இவற்றில் ஏற்றி வரப்பட்டுள்ள உணவுப் பொருள்களில்பெரும் பாலானவை பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவை கடந்த நான்கு மாதங்களின் முன் கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு உள்ள களஞ்சியத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது என்பது தெரிந்ததே திங்கள் முதல் பத்து லொறிகள் இதற்கு பயன்படுத்தப்படவுள்ளன. (ச)

## தமிழீழப்

வேலைத்திட்டங்களில் பெண்களின் கல்வி வளர்ச்சி, சீதனக் கொடுமையை ஒழித்தல் என்பன குறித்து ஆராயப்பட்டன.

இந்தமாநாட்டில் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மகளிர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## பாடசா. அபி

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளில் கல்வி அமைச்சு பாடசாலை அபிவிருத்திச் சபைகளை நிறுவ உள்ளது எனத் தெரிவித்தார்.

## தடுத்து

நீங்கள் அனைவரும் எமது போராட்டத்திற்குஊக்கமளிக்கும் வகையில் நல்ல செயல்களைச் செய்து பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.


## மாபெரும்பொதுகூட்டமும் கலை நிகழ்ச்சியும்

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டமும், கலை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளன.

இடம்: மருதனாமடம், இராமநாதன் கல்லூரி மைதானம்.

காலம்: இன்று மாலை 7 மணி

விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி
வலிகாமம் பிரிவு

[2277]

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்,
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணிக்கும்
காண்பிக்கப்படுகின்றது.

## FIVE FOR HELL

(நரகத்திற்கு ஐவர்)
(தமிழ் விளக்கம் செய்யப்பட்டது)

[சி/4011]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.